<u>DEPOSITION OF WITNESS</u>

(Chapter of XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, SRIVILLIPUTTUR

**S.C.No.97/2022**

**LW2 = PW2** **Date.25.2.2026**

Deposition of : PW2 Witness for prosecution /Defence/Court

| | | | |
|---|---|---|---|
| Name | : மல்லிகா | Caste | : |
| Father's Name | : | Religion | : |
| Village | : | Calling | : |
| Taluk | : | Age | : |

---

**1,2 எதிரிகள் ஆஜர், எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்**

<u>முதல் விசாரணை –</u>

நான் நெசவாளர் காலனியில் கணவருடன் குடியிருந்து இஞ்சி டீக்கடைக்கு பாத்திரம் கழுவும் தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 ஐ எனக்கு தெரியும் அவர் எனது கணவர் ஆவார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 4 வருடங்களுக்கு முன்பு நெசவாளர் காலனியில் உள்ள எனது குடிசை வீட்டில் நான் எனது கணவர் ராமர் மற்றும் எனது மகள் மகாலட்சுமியும் படித்திருந்தோம். அதிகாலை 3 மணியளவில் தீயின் அனல் பட்டு நாங்கள் மூவரும் எழுந்து வெளியே வந்த போது ஆஜர் எதிரிகள் டிவிஎஸ் எக்ஸல் வண்டியில் ஏறி ஓடி சென்று விட்டனர்,. அந்த சமயம் ரோந்தில் வந்த எஸ்ஐ பாபு என்பவரும் மற்றும் இரண்டு காவலர்கள் , அருகில் இருந்த ஜோதிலட்சுமி, காளிராஜ் மற்றும் காந்திலட்சுமி ஆகியோர்கள் சேர்ந்து எரிந்து கொண்டு இருந்த தீயை அணைக்க உதவி செய்தார்கள் . தீ எரிந்தததில் எனது மகள் படிப்பிற்கு சம்பந்தப்பட்ட சான்றிதழ் மற்றும் அவளது ஆடைகள் முற்றிலும் எரிந்து சேதமாகி விட்டது அதன் மதிப்பு ரூபாய் 10 ஆயிரத்திற்கு குறைவாக இருக்கும். எதிரி காளிமுத்து எப்பொழுதுமே எனது கணவர் ராமரை மிரட்டி கொண்டே இருப்பார். சம்பவத்திற்கு முதல் நாள் வீட்டில் இருந்து எனது மகாலட்சுமி என்பவரிடம் எதிரி காளிமுத்து அருவாளை வைத்து உன் அப்பன் ராமனை வெட்டி விடுவேன் என்றும் எப்பொழுதினாலும் உன் அப்பன் சாவு என் கையில் தான் என்று மிரட்டி சென்றதாக

எனது மகள் என்னிடமும் எனது கணவர் ராமரிடமும் சொன்னாள். நடந்த சம்பவத்திற்கு நடவடிக்கை எடுப்பதற்காக எனது கணவர் திருவில்லிபுத்தூர் நகர் காவல்நிலையத்தில் ஒரு புகார் கொடுத்தார். சம்பவத்தை பற்றி போலீஸார் என்னை விசாரணை செய்தார் . இந்த வழக்கு சம்பந்தமாக நான் வேற எதுவும் சொல்ல வில்லை.

**குறுக்கு விசாரணை** – எதிரி தரப்பில்

வீடு எரிந்த போது திருவில்லிபுத்தூர் டவுண் எஸ்ஐ பாபுவும், மற்றும் உடன் வந்த 4 காவலர்களும் சம்பவ இடத்திற்கு வந்தார்கள் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்லி உள்ளது போல் திருவில்லிபுத்தூர் டவுண் எஸ்ஐ பாபுவும், மற்றும் உடன் வந்த 4 காவலர்களை விசாரித்தால் மேற்படி சம்பவம் நடந்தது பற்றி உண்மை விவரம் தெரிய வரும் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் வைத்து திருவில்லிபுத்தூர் டவுண் எஸ்ஐ பாபுவிடம் புகார் மனு கொடுத்தோம் என்றால் சரிதான். சம்பவம் நடந்தததிற்கு முன்பாக எனது மகளிடம் 1வது எதிரி மிரட்டியது சம்பந்தமாக எனது கணவர் காவல்நிலையத்தில் புகார் மனு கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி கொடுத்த புகார் மனுவை பார்த்தால் மேற்படி சம்பவம் பற்றி தெரிய வரும் என்றால் சரிதான். எனது கணவர் ராமருக்கு பேச்சியம்மாள் என்ற முதல் மனைவி உள்ளார் என்றால் அவர் எங்களது வீட்டில் சும்மா இருக்கிறார். பேச்சியம்மாள் எத்தனை வருடமாக எங்கள் வீட்டில் இருக்கிறார் என்றால் சுமார் 10 வருடமாக இருந்து வருகிறார். எனது கணவர் ராமர் மீது பக்கத்து வீட்டில் உள்ள ஜோதிலட்சுமி மீது பாலியல் புகார் சம்பந்தமாக எனது கணவர் தண்டிக்கப்பட்டு தற்போது பிணையில் இருந்து வருகிறார் என்றால் சரிதான். தனலட்சுமி என்பவர் எனது கணவருடன் எங்கள் வீட்டில் 4,5 வருடங்கள் இருந்து வந்தார் . தனலட்சுமியை விசாரித்தால் சம்பவம் நடந்த அன்றைய தேதியில் உண்மை நிலவரம் தெரிய வரும் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்லி உள்ள சங்கதிகள் அனைத்தும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் அ.சா.1 உடன் ஒரே வீட்டில் வசித்து வருவதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளித்து வருகிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்று சொன்னால்

சரியல்ல. நான் சொன்ன தேதியில் சொன்ன விதத்தில் நான் அ.சா.1 உடன் குடியிருக்க வில்லை என்றால் சரியல்ல.

சாட்சிகளின் வாக்குமூலம் எதிரிகளின் முன்னிலையில் தட்டெழுத்தருக்கு என்னால் சொல்லப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் "சரி" என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(Sd/-M.Akiladevi)
உதவி அமர்வு நீதிபதி,
ஸ்ரீவில்லிபுத்தூர்.